# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# ஆறாம் பத்து

## ஒன்பதாம் திருமொழி - பெடை அடர்த்த
## திருநறையூர் 6

** பெடை அடர்த்த மடவன்னம் * பிரியாது * மலர்க் கமலம்
மடல் எடுத்து மது நுகரும் * வயல் உடுத்த திருநறையூர் **
முடை அடர்த்த சிரம் ஏந்தி * மூவுலகும் பலி திரிவோன் *
இடர் கெடுத்த திருவாளன் * இணை அடியே அடை நெஞ்சே! 1

கழி ஆரும் கன சங்கம் * கலந்து எங்கும் நிறைந்தேறி *
வழி ஆர முத்து ஈன்று * வளங்கொடுக்கும் திருநறையூர் **
பழி ஆரும் விறல் அரக்கன் * பருமுடிகள் அவை சிதற *
அழல் ஆறும் சரம் துரந்தான் * அடி இணையே அடை நெஞ்சே! 2

சுளை கொண்ட பலங்கனிகள் * தேன் பாய கதலிகளின் *
திளை கொண்ட பழம் கெழுமு * திகழ் சோலைத் திருநறையூர் **
வளை கொண்ட வண்ணத்தன் * பின் தோன்றல் * மூவுலகோடு
அளை வெண்ணெய் உண்டான் தன் * அடி இணையே அடை நெஞ்சே! 3

துன்றோளித் துகிற்படலம் * துன்னி எங்கும் மாளிகை மேல் *
நின்றார வான் மூடும் * நீள் செல்வத் திருநறையூர் **
மன்றாரக் குடம் ஆடி * வரை எடுத்து மழை தடுத்த *
குன்றாரும் திரள் தோளன் * குரைகழலே அடை நெஞ்சே! 4

அகிற்குறடும் சந்தனமும் * அம்பொன்னும் அணிமுத்தும் *
மிகக் கொணர்ந்து திரை உந்து * வியன் பொன்னித் திருநறையூர் **
பகல் கரந்த சுடர் ஆழிப் படையான் * இவ்வுலகேழும் *
புகக் கரந்த திருவயிற்றன் * பொன் அடியே அடை நெஞ்சே! 5

பொன் முத்தும் அரி உகிரும் * புழைக் கைம்மா கரிக்கோடும் *
மின்னத் தண்திரை உந்தும் * வியன் பொன்னித் திருநறையூர் **
மின் ஒத்த நுண்மருங்குல் * மெல்லியலை * திருமார்பில்
மன்னத் தான் வைத்து உகந்தான் * மலர் அடியே அடை நெஞ்சே! 6

சீர் தழைத்த கதிர்ச் செந்நெல் * செங்கமலத்து இடை இடையின் *
பார் தழைத்துக் கரும்பு ஓங்கிப் * பயன் விளைக்கும் திருநறையூர் **
கார் தழைத்த திரு உருவன் * கண்ண பிரான் விண்ணவர் கோன் *
தார் தழைத்த துழாய் முடியன் * தளிர் அடியே அடை நெஞ்சே! 7

** குலை ஆர்ந்த பழுக்காயும் * பசுங்காயும் பாளை முத்தும் *
தலை ஆர்ந்த இளங்கமுகின் * தடஞ்சோலைத் திருநறையூர் **
மலை ஆர்ந்த கோலம் சேர் * மணிமாடம் மிக மன்னி *
நிலை ஆர நின்றான் தன் * நீள் கழலே அடை நெஞ்சே! 8

மறை ஆரும் பெருவேள்விக் * கொழும் புகை போய் வளர்ந்து எங்கும் *
நிறை ஆர வான் மூடும் * நீள் செல்வத் திருநறையூர் **
பிறை ஆரும் சடையானும் * பிரமனும் முன் தொழுது ஏத்த *
இறை ஆகி நின்றான் தன் * இணை அடியே அடை நெஞ்சே! 9

** திண்களக மதிள் புடை சூழ் * திருநறையூர் நின்றானை *
வண்களக நிலவு எறிக்கும் * வயல் மங்கை நகராளன் **
பண்கள் அகம் பயின்ற சீர்ப் * பாடல் இவை பத்தும் வல்லார் *
விண்கள் அகத்து இமையவராய் * வீற்றிருந்து வாழ்வாரே 10

**அடிவரவு:** பெடை கழி சுளை துன்று அகில் பொன் சீர் குலை மறை திண் கிடந்த

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**